இராணிப்பேட்டை நகராட்சி வி. ஆர்.வி.அரசு உதவிபெறும் துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு விரிவாக்க திட்டத்தினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி, தொடங்கி வைத்து பள்ளி குழந்தைகளுடன் காலை உணவு அருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யுசந்திரகலா, நகர மன்றத் தலைவர் சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா மற்றும் நகரச் செயலாளர் பி.பூங்காவனம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் இசட்.ஏ.அஜ்மல் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் நகரில் உள்ள டேனிஷ் மிஷன் நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் உணவருந்தினார்.

மாநில கல்விக் கொள்கையை ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும்!

கல்வியையும் - மருத்துவத்தையும் இரு கண்களாகக் கருதுகிறார் முதல்வர்!

கன்னியாகுமரியில் – அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஆக. 27- முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், மருத்துவத்தையும் இரு கண்களாக பார்க்கிறார்கள் என்று கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் தலைமை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி பேசுகையில் குறிப்பிட்டார்.

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிக்கல்வித்துறை சார்பில் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் தலைமை ஆசிரியர்களுடனான கலந்தாய்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் நேற்று (25.08.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பேசுகையில்- தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் அறிவுறுத்துலுக்கிணங்க கன்னியாகுமரி மாவட்டத் திற்குட்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தொடக்கநிலை கல்வியில் மாணவர்கள் அடைந்துள்ள கற்றல் அடைவினை அறிந்து கொள்வதற்காக மூன்றாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மாநில அரசால் அடைவு தேர்வு நடத்தப்படுகிறது.

ஆங்கிலத்தில் SLAS (State level Achievement Survey) எனப்படும் இத்தேர்வினை தமிழ்நாடு அரசு அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் நடத்துகிறது.

கற்பித்தல் அணுகுமுறை மாற்றி அமைப்பு!

அந்தந்த வகுப்புகளில் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய அடைவு திறன், முழுமையான முறையில் மாணவர்கள் பெற்றுள்ளார்களா என சோதிப்பதற்காகவும், மாணவர்களின் கற்றலின் இடையே காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்காகவும், கற்றல் கற்பித்தலில் குறிப்பிட்ட இலக்கினை வரையறுப்பதற்காகவும், மாவட்டங்கள் இடையே மாணவர்கள் பெற்றுள்ள அடைவினை ஒப்பீடு செய்வதற்காகவும், இத்தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பீடுகளைப் பொறுத்து இனிவரும் காலங்களில் பாடத்திட்டம் வடிவமைத்தல், கற்பித்தல் அணுகுமுறைகளை மாற்றி அமைத்தல், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆகியவை திட்டமிடப்பட உள்ளன.

மேலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி சதவீதத்தில் அதிக அக்கறை காட்டுகிற நாம், தொடக்க நிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் தேர்ச்சியிலும் அக்கறையோடு, ஆசிரியர்களின் பங்களிப்பு முழுமையாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் நடைபெறும் இத்தேர்வு, நமது மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நடைபெற்றது. மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 04.02.2025 அன்றும், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 05.02.2025 அன்றும், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான அடைவு தேர்வு 06.02.2025 அன்றும் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் SLAS தேர்வு 517 அரசு பள்ளிகள், 292 அரசு உதவி பெறும் பள்ளிகள் என மொத்தம் 809 பள்ளிகளுக்கு நடைபெற்றது. இந்த தேர்வில் 3, 5 மற்றும் 8-ம் வகுப்பை சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு நடத்தப்பட்டது. அதன்படி நமது மாவட்டத்தில் 8506 மாணவியர்களும், 8581 மாணவர்களும் தேர்வு எழுதினார்கள். இதில் 66.55 சதவீதம் பெற்றுள்ளது. இந்த தேர்வை தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களை சேர்ந்த 9 லட்சத்து 80 ஆயிரம் மாணவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதில் கன்னியாகுமரி மாவட்டம் முதலிடத்தை பிடித்தது பெருமையாக உள்ளது. அதற்காக உழைத்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தக்கலை, திருவட்டார், குருந்தன்கோடு, கிள்ளியூர், இராஜாக்கமங்கலம், அகஸ்தீஸ்வரம், மேல்புறம், தோவாளை உள்ளிட்ட வட்டார கல்வி நிலையங்கள் SLAS தேர்வில் நல்ல தரநிலையில் உள்ளனர். ஆனால் முன்சிறை வட்டம் தரநிலையில் பின்தங்கி உள்ளது. எனவே மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் தனிகவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இந்த தேர்வு தொடர்பான ஆய்வு கூட்டம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டமாக நான் நடத்தி வருகிறேன். 22-வது மாவட்டமாக கன்னியாகுமரியில் இன்று ஆய்வு நடத்துகிறேன்.

234 தொகுதிகளிலும் நேரடி ஆய்வு!

மேலும் 234 தொகுதிகளுக்கும் நேரடியாக நான் சென்று ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு என்னென்ன தேவைப்படுகிறது என்ற விவரங்களையும் கேட்டறிந்து வருகிறேன். நான் தமிழ்நாட்டிற்குட்பட்ட பல்வேறு இடங்களுக்கு ஆய்வில் செல்லும் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் கணித மரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் அனைத்து கணித சூத்திரங்கள் எழுதி தொங்க விடப்பட்டுள்ளது. இந்த புதுமையான யோசனை குறித்து அடிக்கடி பேசுவேன். பெற்றோர்களின் நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் நம் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் தனி கவனம் எடுத்திட வேண்டும். தொடர்ந்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி புகுட்டுவதில், பல் வேறு புதுமைகளை புகுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், மருத்துவத்தையும் இரு கண்களாக கருதுகிறார்கள். நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 12ம் வகுப்பு தேர்வில் தமிழ்நாடு அளவில் 97.01 சதவீதம் பெற்று 5வது இடமும், அதேபோன்று 10 வகுப்பு தேர்வில் 96.24% தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அளவில் 4வது இடம்பிடித்துள்ளது மிகவும் பெருமைக்குரியது.

தமிழ்நாடு அரசு வகுத்துள்ள மாநில கல்விக் கொள்கை குறித்து அனைத்து கல்வி பிரிவினரும், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் முழுவதுமாக தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கல்வித்தரம் பல மடங்கு உயர்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், ஏ.ஐ. உள்ளிட்டவற்றில் ஆசிரியர்கள் தங்களை காலத்திற்கு ஏற்ப மேம்படுத்தி கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு பாடங்கள் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் அவர்களுக்கு நன்றாக புரிய வைக்க வேண்டும். அந்த பாடங்களையும் மாணவர்கள் உள்வாங்கி புரிந்து கொண்டு படித்திட ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி விகிதம் 100 சதவீதம் இலக்கை எட்ட வேண்டும். அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் அதற்கான முழு முயற்சியினையும் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பள்ளி கல்வித் துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி, தேரூர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் சுந்தர ராஜன், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஜெயராஜ் (இடைநிலை), திருமதி. ஷெர்லின் விமல் (மார்த்தாண்டம்), திருமதி.ரமா (தொடக்க கல்வி), திருமதி. அஜிதா (தனியார்), மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்முருகன், வட்டார கல்வி அலுவலர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

மதுரை வடக்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.செல்வராஜ் அவர்கள் மேலூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், அவரை பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்து, மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப் பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஆகஸ்ட் 25 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,
திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
442/5, ராஜா ரைஸ்மில் அருகில்,
வலைச்சேரிபட்டி ரோடு,
கொட்டாம்பட்டி
மதுரை 625 103.அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

வேலூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2025 காட்பாடியில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடந்தது. போட்டியை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் தொடங்கி வைத்தார். மாவட்டஆட்சித் தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் துணை மேயர் எம்.சுனில்குமார் ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னிய ராஜா, மாமன்ற உறுப்பினர் விமலா பூஞ்சோலை சீனிவாசன், சத்துவாச்சாரி வட்ட கழக செயலாளர் ஆர்.பி.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் அறிவிப்பு! விருது பெறுபவர்களை

தாய்க் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 27 - தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. விருது பெறுபவர்களை தாய்க் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தி.மு.க. தலைமை நிலைய அமைப்பு, ஆண்டுதோறும் நடத்தும் 'முப்பெரும் விழா' நிகழ்வில் 'பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது' என்ற விருதுகள் வழங்கப்படும். (அடுத்து அது 'பாவேந்தர் விருது, பேராசிரியர் க. அன்பழகன் விருது, மு.க. ஸ்டாலின் விருது' என்று விரிவாக்கமும் பெற்றது).

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பாவேந்தர், பேராசிரியர், மு.க. ஸ்டாலின் விருதுகளுக்கு இவ்வாண்டு கரூரில்நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவில் வழங்க அறிவிக்கப்பட்டுள்ள விருதாளர்கள் பட்டியல் மிக மிகப் பொருத்தமானது.

கொள்கையாளர்களாக, அக்கொள்கைகளுக்காகக் கஷ்ட, நஷ்டம் ஏற்று, இயக்கத்தில் நீண்ட காலம் பணியாற்றிய தியாகச் செம்மல்களுக்கு விருதுகள் அறிவித்து வாழும் போதே அவர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவது திராவிட இயக்கத்தின் புகழ் மகுடத்தில் ஒளிரும் முத்துக்களாகும்.

இவ்வாண்டு விருதுக்குரியோராக அறிவிக்கப்பட்டிருப்போர்:

தந்தை பெரியார் விருது கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அண்ணா விருது டாக்டர் சுப. சீத்தாராமன் பாளையங்கோட்டை நகர்மன்ற மேனாள் தலைவர் - கலைஞர் விருது சோ.மா.இராமச்சந்திரன் நூற்றாண்டு கண்டவர், அண்ணாநகர் சட்டப் பேரவைத் தொகுதி மேனாள் உறுப்பினர் பாவேந்தர் விருது குளித்தலை சிவராமன் குளித்தலை ஒன்றியக் குழு மேனாள் தலைவர் - பேராசிரியர் விருது மருதூர் ராமலிங்கம் சட்டப் பேரவை- தி.மு.க. மேனாள் கொறடா மு.க. ஸ்டாலின் விருது பொங்கலூர் நா. பழனிச்சாமி மேனாள் அமைச்சர் கொள்கைப் போராளிகளாகவும், திராவிட இயக்க முத்திரையாளர்களாகவும், தொண்டாலும் சிறந்தவர்களை, தக்காரை அடையாளம் கண்டு இப்படிப் பெருமைப்படுத்தும் தி.மு.க. தலைவர் சகோதரர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு!

விருது பெறவிருக்கும் வேர்களுக்கு நமது பாராட்டும், மகிழ்ச்சியும் கலந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் தாய்க் கழகமான திராவிடர் கழகம் பூரிப்பும், பெருமிதமும் அடைகிறது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கே.பழனியப்பன் முன்னிலை! கீழ்வேளூர் வடக்கு, கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய

தி.மு.க. நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம்!

ப.கோவிந்தராசன் சிறப்புரை!

நாகை, ஆக. 27 - நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம், கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கூட்டம் கீழ்வேளூர் சண்முகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் தங்க. மனோகரன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பழனியப்பன் முன்னிலை வகித்தார். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன் பேசினார். கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஜீவானந்தம், ஜவகர், முத்துராதா கிருஷ்ணன், கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் அ. வேதநாயகம், எஸ்.புருஷேத்மதாஸ், பாரதிமோகன், ஆர். நடராஜன், சி.வீரமணி, ஷேக்முகமது, வெண்ணிலா பாபு, ரவிக்குமார், ஆர்.கே. கண்ணன், கணேசன், கிரிதரன், மதியழகன், சிவக்குமார், உமாபாலமுரளி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்

திராவிட மாடல் அரசை நடத்தி வரும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று உறுப்பினர் சேர்க்கையில் 50 விழுக்காடுக்கு மேல் கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்து வெற்றியை ஈட்டி தந்த தொகுதி பார்வையாளருக்கும், மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும், அனைத்து நிலை கழக நிர்வாகிகளுக்கும் கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய தி.மு.க. தனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது என்றும்

தேர்தல் ஜனநாயகத்தை சிதைக்கும் வகையில் பீகார் மாநில சிறப்புத் திருத்தத்தினை எதிர்த்து திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் அனைத்தும் கடுமையாக எதிர்ப்பினை பதிவு செய்த நிலையிலும், உச்சநீதிமன்றமே தவறு இருந்தால் தலையிடுவோம் என்று எச்சரித்த பிறகும் அம்மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர் நீக்கிய ஜனநாயக விரோத நடவடிக்கையின் தேர்தல் ஆணையத்திற்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தலைமைக் கழக வேண்டுகோளுக்கு இணங்க வரும் 2026 சட்ட மன்றத் தேர்தலை முன்னிட்டு வரும் காலங்களில் எவ்வாறு, எந்த முறையில் தேர்தல் பணியாற்றுவது என்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க கீழ்வேளூர் வடக்கு , தெற்கு ஒன்றியத்தில் கிளைகள் தோறும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பாக நிலை முகவர்கள் 2, பாக டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும், அனைத்து நிலை கழக நிர்வாகிகளுக்கும் அனைவரையும் ஒருங்கிணைத்து கிளை கழக கூட்டத்தை கூட்டிட வேண்டும் என்றும், கூட்ட நடவடிக்கைகளை மினிட் புத்தகங்களில் பதிவு செய்து மினிட் நோட்டை ஒன்றிய கழகத்திடம் ஒப்படைத்திட வேண்டும் என்றும்

2026 சட்ட மன்றத் தேர்தலில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 200+மேற்பட்ட தொகுதிகளை வெல் வோம் என்ற இலக்கை எட்டும் வகையில் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகள் தோறும் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்து கூறியும், பயனாளிகள் பயனடைந்ததையும், வாக்காளர்களிடம் எடுத்து கூறி கீழ்வேளூர் சட்ட மன்றத் தொகுதியின் வெற்றிக்கு கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் உள்ள கிளைகள் தோறும் கழகத்தினர், கழக நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று திண்ணை பிரச்சார பணியை தொடர்ந்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில்

தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்தது!

சென்னை, ஆக. 27 – ஐபோன்கள் ஏற்றுமதியால் மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

ஐபோன்கள் ஏற்றுமதியால் மட்டுமே தமிழ்நாட்டின் மின்னணு சாதனங்களின் ஏற்றுமதி மதிப்பு 783% அதிகரித்துள்ளது. 2020 – 2021ல் ரூ.14,565 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மின்னணு சாதன ஏற்றுமதி மதிப்பு 2024 – 2025ல் ரூ.1,28,536 கோடியாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை நேற்று (26.08.2025) சென்னையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி நகராட்சி, டேனிஷ் மிஷன் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.